**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.132/2022

பெயர் : தினேஷ் பாபு (DW5) (Cross )

த/க/பெ. :

தேதி : 09.02.2026

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய அழைப்பாணையில் 2ம் பிரதிவாதி சத்தியமூர்த்தியின் விபரம் மட்டுமே கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ. 1 எந்த சர்வே எண்ணுக்குரிய சேமிப்பு கணக்கு என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். எங்கள் வங்கியில்ஆண்டுதோரும் தணிக்கை நட்கும் என்றால் சரிதான் கடைசியாக தணிக்கை நடந்தது 2022-2023. சா.சா.ஆ. 1 ல் கடைசி குறிப்பு 2019 ல் உள்ளது என்றால் சரிதான். அத்துடன் கணக்கை முடித்துவிட்டார்கள். கணக்கு பேரேட்டில் தான் தணிக்கை குறிப்பு இருக்கும். அதில் தணிக்கை குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். கணக்கு வழக்கு சரியாக உள்ளதா என்பதை சரிபார்க்க தான் தணிக்கை செய்வது என்றால் சரிதான். சா.சா.ஆ. 1ல் தணிக்கை குறிப்பு இல்லாததால் அது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. சா.சா.ஆ. 2 – இரண்டாம் பிரதிவாதியின் மனைவி ஆதிமதியின் சேமிப்பு கணக்கு. ஆதிமதியின் கணக்கு பட்டியல் எடுத்துவருமாறு அழைப்பாணையில் குறிப்பிடவில்லை என்றால்சரிதான். எனக்கு சார்வு செய்யப்பட்ட அழைப்பாணையில் பெயர் இல்லாததாலும் அவர் வழக்கின் தரப்பினர் இல்லை என்பதாலும் சா.சா.ஆ. 2 ஆவணம் சாட்சியமாக ஏற்க இயலாது என்றால் சரியல்ல. சா.சா.ஆ. 3 கல்யாணசுந்தரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரின். ஆனால் எனக்கு சார்வு செய்யப்பட்ட அழைப்பாணையில் மேற்படி நபர் பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அழைப்பாணையில் குறிப்பிடப்படாத நபர் குறித்து நான் சாட்சியிம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல. சா.சா.ஆ. 4 திலகவதி க/பெ. கல்யாணசுந்தரம் என்றுள்ளது. எனக்கு சார்வு செய்யப்பட்ட அழைப்பாணையில் பெயர் இல்லாததாலும் அவர் வழக்கின் தரப்பினர் இல்லை என்பதாலும் சா.சா.ஆ. 4 ஆவணம் சாட்சியமாக ஏற்க இயலாது என்றால் சரியல்ல. சா.சா.ஆ. 5 முதல் 7 கல்யாண சுந்தரம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அழைப்பாணையில் குறிப்பிடப்படாத நபர் குறித்து நான் சாட்சியிம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல. அழைப்பாணியில் குறிப்பிடப்பட்டாத

நபர் குறித்து நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதால் தனிப்பட்ட மனசாய்வு அடிப்படையில் 2, 3 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக சாச்டசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் நம்பகத்தன்மை உடையது அல்ல என்றாலும் ஏற்க கூடியது அல்ல என்றாலும் சரியல்ல.